**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP.55/2024**

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ஆம் நாள் வியாழன் கிழமை ம.சா.2 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. செல்வமணி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுப்பிரமணியன் | த/பெ.: | கோவிந்தன் |
| கிராமம்: | சரபோஜிராஜபுரம் | தாலுக்கா: | வேதாரண்யம் |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 70 | முகவரி: | சரபோஜிராஜபுரம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 24.04.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2–ம் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிருபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

**1,2 – எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. எனது மகன் படிக்கவில்லை. எனது மகனின் ஆதார் அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது மகனின் பிறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. எனது மகனின் வயது குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 1–ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை சாலை விதிகளை அனுசரித்து மெல்ல தான் ஓட்டிச் சென்றார் என்றும், எனது மகன் தான் சாலையின் குறுக்கே வந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் விவசாய வேலை பார்த்து மாதம் ரூ.25,000/– சம்பாதித்து வந்தார் என்று கூறியுள்ளதற்கு

ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவில் ரூபாய் 20 லட்சம் இழப்பீடு கூறியிருப்பது மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு என்னுடைய மகனின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும் காரணம் என்று சொல்லி மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1–ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றும், 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் உரிமையாளர் ஒப்பந்த விதிகளை மீறியுள்ளதால் 1–ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல. 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யக் கூடியது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு இறந்து போன எனது மகன் தான் காரணம் என்றும், அதனால் 1,2 எதிர்மனுதாரர்கள் நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.